இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்
வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை

# மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 18.11.2015

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 23°செ முதல் 32°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 20°செ முதல் 25°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 11°செ முதல் 18°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 8°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் பல இடங்களில் மிதமானது முதல் கன மழை காணப்பட்டது.

**வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (18.11.2015 முதல் 22.11.2015)**

**1. மேற்கு மண்டலம்**

மேற்கு மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பரில் வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 84 முதல் 88 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 80 முதல் 84 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் ஐந்து நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதால் இறவை மற்றும் மானாவாரி பயிர்களுக்கு போதிய வடிகால் வசதி ஏற்படுத்தவும்.
- ✓ மழை நீரை சேகரிப்பதன் மூலம் பிற்காலத்தில் பயன்படுத்தலாம்.
- ✓ காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் திராட்சையில் அடிச்சாம்பல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. இதை கட்டுப்படுத்த ஒரு சதவீதம் போர்டாக்ஸ் கலவையை மழை இல்லாத நாட்களில் தெளிக்கவும்.
- ✓ தற்போது நிலவும் வானிலையை கருத்தில் கொண்டு குளிர்கால கம்போடியா பருத்தி அறுவடையை தள்ளிப்போடவும்.
- ✓ வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதால் செடிகளில் வேர்களின் செயல்முறை குறைவாக இருக்கும். எனவே மண்ணின் வழியாக உரமிடுவதை தவிர்க்கவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமானமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 28°செ 29°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 86 முதல் 92 சதவிகிதமாகவும்

பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 5 கி.மீ முதல் 14 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மழை நீர் சூழ்ந்துள்ள வயல்களில் உடனடியாக வடிகால் வசதி ஏற்படுத்தி நீரினை வடித்து வேர்பகுதிக்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்யவும்.
- ✓ பரிந்துரை செய்யப்படும் தழைச்சத்தை மூன்று அல்லது நான்கு தவணையாக சாம்பல்சத்துடன் சேர்த்து மேலுரமாக இடவும்.
- ✓ தற்பொழுது நிலவும் வானிலையின் காரணமாக சம்பா நெற்பயிரில் பாக்டீரியா இலைகருகல்நோய் மற்றும் இலை கீறல் நோய்கள் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 20 சத பசுஞ்சாணக் கரைசலை நோய் அறிகுறி தென்பட்ட உடன் ஒருமுறையும் பிறகு 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் தெளிக்கவும் (40 கிலோபசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து இரவு முழுவதும் ஊறவைத்து தெளிந்த நீருடன் மேலும் 100 லிட்டர் தண்ணீர் சேர்த்து ஒரு ஏக்கரில் தெளிக்கவும்) அல்லதுகாப்பர் ஹைட்ராக்ஸ்சைடு 500 கிராம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ சம்பா நெற்பயிரில் இலைமடக்குப் புழு தாக்குதல் பரவலாக தென்படுகிறது.இதனைக்கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு குளோர்பைரிபாஸ் 20 இ.சி. 500 மி.லி அல்லது புரபனோபாஸ் 50இ.சி. 400 மில்லி வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான்மூலம் தெளிக்கவும்.
- ✓ சம்பா நெற்பயிரில் புகையான் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 40 கிராம் தயோமித்தாக்சாம் அல்லது புப்ரோபைசின் 25 எஸ்.சி. 320மில்லி, என்ற மருந்தினை தூர் பகுதி நன்கு நனையும்படி தெளிக்கவும். நெல்வயலில் பட்டம் பிரித்து தண்ணீர் வடித்து காற்றோட்டத்தை ஏற்ப்படுத்துவதன் மூலம் புகையான்தாக்குதலிலிருந்து பயிர்களை பாதுகாக்கலாம்.
- ✓ மழை நீர் சூழ்ந்துள்ள வயல்களில் உடனடியாக வடிகால் வசதி ஏற்படுத்திநீரினை வடித்து வேர்பகுதிக்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்யவும்.
- ✓ அடுத்துவரும் ஐந்து நாட்களுக்கு மிதமான மழை பொழிய வாய்ப்புள்ளதால் நீர் தேங்கிநிற்கும் இடங்களில் சம்பயிரில் மேலுரம் இடுவதை தவிர்த்தும் மற்றும் தாளடிபயிரில் நடவு செய்யும் பொழுது அடியுரம் இடுவதை தவிர்த்தும் மழை நின்ற பின்நீரை வடித்து விட்டு சீராக தூவவும்..

**3. தெற்கு மண்டலம் - 1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் அதிகமான மேகமூட்டத்துடன் காணப்படும். கனமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 29°செ முதல் 31°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை $24^0$செ முதல் $25^0$செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 78 முதல் 90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 5 கி.மீ முதல் 12 கி.மீ வேகத்திலும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ நெல் நடவு செய்யப்படாமல் உள்ள பகுதிகளில் மழை நின்றபிறகு நடவு செய்தலை துரிதமாக முடிக்கவும்.
- ✓ வரும் தினங்களில் கனமழை எதிர்பார்க்கப்படுவதால் நெற்பயிருக்கு நீர்ப்பாசனம் செய்வதை தவிர்த்து வயலில் போதிய வடிகால் வசதி செய்யவும்.
- ✓ வரும் தினங்களில் கனமழை எதிர்பார்க்கப்படுவதால் வயலில் நீர் தேங்குவதை தவிர்க்க அனைத்து பயிர்களுக்கும் போதிய வடிகால் வசதி செய்யவும்.
- ✓ நாற்று பருவத்திலுள்ள சூரியகாந்தி மற்றும் கம்பு ஆகிய பயிர்களில் அதிகப்படியான செடிகளை களைந்து போதிய பயிர் எண்ணிக்கையை பராமரிக்கவும்.
- ✓ வரும் தினங்களில் கனமழை எதிர்பார்க்கப்படுவதால் மிளகாய் நாற்றங்கால் மற்றும் நடவு வயலில் நீர் தேங்குவதை தவிர்க்க போதிய வடிகால் வசதி செய்யவும்.

**4. தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் தெற்கு மண்டலமான திண்டுக்கல், மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும் இலேசானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலை 28°செ முதல் 30°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 82 முதல் 94 சதவீதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 4 கி.மீ முதல் 5 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ கரும்பில் துரு நோய் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு மேன்கோசேப் 2கி. தெளிக்க வேண்டும்.
- ✓ வரும் தினங்களில் ஆங்காங்கே கனமழை எதிர்பார்க்கப்படுவதால் வயலில் நீர் தேங்குவதை தவிர்க்க மனாவாரி பயிர்களுக்கு போதிய வடிகால் வசதி செய்யவும்.
- ✓ அடுத்த மூன்று நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளதால் விவசாயிகள் தங்களுடைய நெற்பயிர்களுக்கு பூச்சி மருந்தை அடிப்பதையும் மற்றும் உரமிடுவதையும் தள்ளிப் போட வேண்டும்..
- ✓ நெற்பயிரில் பழுப்பு நிற நோய் காணப்பட்டால் அதனைக் கட்டுப்படுத்த விவசாயிகள் 10-15 நாட்கள் இடைவேளியில் 2-3 முறை மேன்கோசேப் 2 கிராம், ஒரு லிட்டர் தண்ணரில் கலந்து தெளிக்க வேண்டும்.
- ✓ பெறப்பட்ட கனமழையாலும் மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையினாலும் மக்காச்சோளத்தில் அடிச்சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு மெட்டலாக்சைல்+ மேன்கோசெப் @ 100 கிராம் ஆகியவற்றை விதைத்த 20 ம் நாள் தெளிக்கவும்.

- ✓ தொடர்ந்து வயல்களில் தண்ணீர் தேங்குவதால் கரும்பில் இரும்பு சத்து பற்றாக்குறை காணப்படும். ஆகவே இரும்பு சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்ய 250 கிராம் பெரஸ் சல்பேட் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**5. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 17°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 88 முதல் 94 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 4 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை.**

- ✓ மாவட்டத்தில் மிதமான மழை ஐந்து நாட்களுக்கு எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ .வரும் நாட்களில் பலத்த மழை இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், நிலத்தில் தண்ணீர் தேங்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.
- ✓ தொடர் மழையின் காரணமாக, காய்கறி பயிர்களில் நோய் ஏற்படுவதை தடுக்க,சூடோமோணஸ் 10 மில்லி , ஒரு லிட்டர் தண்ணீருக்கு என்ற அளவில் பயிர்களின் மீதுதெளிக்கவும்.
- ✓ கடந்த வாரம் பெய்த தொடர் மழையின் காரணமாக, வெள்ளை பூண்டில், ப்யூசேரியம் அழுகல் நோய் பரவி வருகின்றது. இதனை கட்டுப்படுத்த, கார்பெண்டசிம் 2 கிராம் , ஒரு லிட்டர்தண்ணீரில் கரைத்து பயிரைச்சுற்றி ஊற்றவும்.

**6.வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 26°செ முதல் 28°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல் 22°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 86 முதல் 94 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகமானது 3 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வடகிழக்கு பருவமழையின் தாக்கம் தணிந்துள்ள நிலையில் மழைக்கான வாய்ப்பு குறைந்து இருந்தாலும், கோழிகளில் அதிக தீவன எடுப்பு அதிகரித்து காணப்படும்.
- ✓ தீவன எடுப்பை கட்டுப்படுத்த தீவனத்தில் எரிசக்தியின் அளவை 50 , 70 கிலோ கலோரி அளவில் (2550 கிலோ கலோரி வரை) தர வேண்டும், மேலும். பக்கவாட்டில் படுதாவை கட்டுவது சிறந்தது, இக்காலகட்டத்தில் மூலப்பொருட்களின் தரத்தில் மிகுந்த கவனம் கொள்ளவேண்டும்,
- ✓ தற்பொழுது கிடைக்கின்ற மழையினைப் பயன்படுத்தி நெல் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் நாற்று விடாமல் நேரடி நெல் விதைப்புக் கருவி மூலம் நேரடியாக நெல் விதைப்பினை

*மேற்கொள்ளலாம். ஒரு ஏக்கருக்கு 10 கிலோ விதை தேவைப்படுகிறது, இக்கருவியின் மூலம் 20 செ,மீ, இடைவெளியில் வரிசையாக விதைப்பு செய்யலாம்.*

### 7. வடகிழக்கு மண்டலம்

*அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். கனமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 24°செ முதல் 28°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 25°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 88 முதல் 96 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 4 கி.மீ முதல் 8 கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

### வேளாண் அறிவுரை.

- ✓ ஆடுகளை மேடான இடத்தில் தங்கவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் இதன் மூலம் ஈரம் மற்றும் சேற்றினால் ஏற்படும் கூளம்பு அழகல் நோயிலிருந்து பாதுகாக்கலாம்.
- ✓ கால்நடைகளுக்கு துய்மையான குடிநீர் அளிக்குமாறு கேட்டு கொள்கிறோம் மேலும் குடிநீர் கழிவுநீர் கலக்காமல் பார்த்துக்கொள்ளவும்.
- ✓ இளம் கன்றுகள் மற்றும் ஆட்டு குட்டிகளை மழை மற்றும் குளிரின் தாக்கத்திலியிருந்து பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் மேலும் கொட்டகையின் தரை பகுதியின் தேவையான அளவு கூளத்தை பரப்பி மற்றும் மின்விளக்கு அமைத்து தேவையான வெப்பத்தை அளிக்கலாம்.
- ✓ கால்நடைகளை மழைபெய்யும் நேரங்களில் மேச்சலுக்கு அனுப்பாமல் பாதுகாப்பான கொட்டகையில் பராமரிக்குமாறு கேட்டு கொள்கிறோம்.
- ✓ உழவர்கள் தங்கள் கால்நடைகளுக்கு தேவையான உலர் தீவனத்தை மழையில் நனையாதவாறு சேமிக்கும் படி கேட்டுக்கொள்கிறோம். அடர்தீவன உற்ப்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களை மழையில் நனையாமல் பாதுகாப்பதால்அப்லாடாக்ஸின் எனும் நச்சு உற்பத்தியை தடுக்கலாம்.
- ✓ கோழிப் பண்ணைகளில் நனைந்த கூளத்தை அகற்றிவிட்டு புதிய கூளத்தை பரப்ப வேண்டும்.
- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு கன மழை பெய்ய வாய்ப்புள்ளதால் உழவர்கள் தங்களுடைய நெற்பயிர்களுக்கு பூச்சி மருந்தை அடிப்பதை தவிர்க்குமாறும் மற்றும் உரமிடுதல் தள்ளிப்போடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- ✓ நெற்பயிர் மற்றும் பிற பயிர்களில் உள்ள அதிகமான தண்ணிரை வெளியேற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

### 8.அதிக மழை பெறும் மண்டலம்

*வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிது. பகல்நேர வெப்பநிலை 31$^0$செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22$^0$செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது.*

காற்றின் ஈரப்பதம் 92 முதல் 96 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வாழை தார்களை அறுவடை செய்யும் பொழுது மழை இருப்பதால் பாலித்தீன் கவர் (2%) பயன்படுத்தி வாழைத் தார்களை பொதிவதன் மூலம் வாழைத் தார்களின் தரத்தை அதிகரிக்கலாம்.
- ✓ தென்னையில் இளம் பருவம் காய்ப்பதற்கு முன் மற்றும் காய்க்கும் பருவத்தில் வரும் நாட்களில் 64.0 மி.மீ அளவு மழை பெய்ய வாய்ப்புள்ளதால் உரமிடுதலை தவிர்க்கவும்
- ✓ இரப்பரில் புதுத்துளிர் மற்றும் பூக்கும் பருவத்தில் பாலித்தீன் ரைன்கார்ட் -ஐ மரத்தில் பால் வடியும் பகுதியில் மேல் பொருத்தவும். இதனால் மழைக் காலங்களிலும் பால் வெட்டலாம்
- ✓ மிளகு வளரும் கொடிகளை தாங்கு மரங்களுடன் சேர்த்து கட்டி ஏற்றி விடவும்.
- ✓ குண்டு மல்லி பூவில் இடை பருவத்தில் தரைமட்டத்தில் இருந்து 50 செ.மீ உயரத்தில் கவாத்து செய்யவும். கவாத்து செய்த பகுதியில் பூசாணைக்கொல்லி தடவவும்.
- ✓ மழை இருப்பதால், அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்களை குறைந்தபட்ச ஈரப்பதம் 12% உலர்த்தியபின் உலர்வான இடங்களில் சேமித்து வைக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**
**கோவை - 3**